ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றுநிருப இல: PS/DSP/03/16

2016 மே மாதம் 04ஆந் திகதி

**அனைத்து அமைச்சுச் செயலாளர்கள்**
**அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்**
**அனைத்து திணைக்களத் தலைவர்கள்**
**அனைத்து மாவட்டச் செயலாளர்கள்**
**அனைத்து உள்ளூராட்சி மன்றப் பிரதானிகள்**
**அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைத் தலைவர்கள்**
**அனைத்து அரச கம்பனிகளின் தலைவர்கள் ஆகியோருக்கு**

**உலக சுற்றாடல் தின நினைவூட்டல் நிகழ்ச்சிகள் - யூன் 05, 2016**

1972 ஆண்டின் ஸ்டொக்ஹோம் நகரில் நடைபெற்ற சர்வதேசச் சுற்றாடல் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய உருவான ஐக்கியநாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் (UNEP) ஆரம்ப நாளை நினைவுகூரும் முகமாக ஒவ்வோராண்டும் யூன் 5 ஆம் திகதி "உலக சுற்றாடல் தினம்" ஆகப் பெயரிடப்பட்டுள்ளது. அதற்கமைய சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக உலகிலுள்ள மக்களைத் தெளிவூட்டுதல் மற்றும் பல்வேறு சுற்றாடல் சிக்கல்கள் தொடர்பாக கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் ஒவ்வோராண்டிலும் யூன் 05 ஆம் திகதி "உலக சுற்றாடல் தினம்" கொண்டாடப்படுகின்றது.

02. தற்போது உலகில் வாழும் 07 பில்லியனான சனத்தொகையானது எதிர்காலத்தில் மேலும் துரிதமாக அதிகரிக்கும். அதற்கமைய அவர்களது தேவைகளும் நாளுக்குநாள் அதிகரிக்கும். இதனால் ஏற்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், முறையற்ற பயன்பாடுகள் மற்றும் வனவிலங்குகள், தாவரங்களின் சட்டவிரோத கடத்தல்கள் மற்றும் தீவைத்தல், காட்டுத்தீ போன்றவற்றின் காரணமாகவும் உலகிலுள்ள வனங்கள் மற்றும் வனவிலங்குகள் மிகவேகமாகக் குறைவடைந்து வருகின்றன. சில உயிரினங்கள் அருகிவரும் ஆபத்துக்கும் உள்ளாகியுள்ளது. காடழிப்பு, வளிமண்டத்தில் காபன் டயொக்சைட் உட்பட பசுமைவீட்டு வாயுக்கள் அதிகரித்தல் போன்ற விடயங்கள் காரணமாக பூகோள வெப்பமயமாதல் உயர்வடைவதனால் இற்றையளவில் உலகம் காலநிலை மாற்றத்துக்கு முகங்கொடுத்தள்ளது. இதுதொடர்பாக தீவிர கவனம் செலுத்தாவிட்டால் மனிதன் உட்பட ஒட்டுமொத்த விலங்கினங்களும் குறுகிய காலத்தில் பல சிக்கல்களுக்கு முகங்கொடுக்கவேண்டியிருக்கும். எனவே வனவளங்கள் மற்றும் வனசீவராசிகளைப் பாதுகாப்பதற்கும், வனப்பரம்பலை விரிவுபடுத்துவதற்கும் உயிர் பன்மைத்துவத்தைப் பாதுகாத்துக்கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன்மூலம் இந்தச் சிக்கல்களுக்கு ஓரளவுக்காவது தீர்வை வழங்கலாம். அதுதொடர்பாக உலகிலுள்ள மக்களின் தீவிர கவனத்தைச் செலுத்துவதற்காக "வனசீவராசி வளங்களைச் சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்கு எதிராக எழுவோம்" (FIGHT AGAINST THE ILLEGAL TRADE IN WILDLIFE) எனும் மகுட வாசகத்தின்கீழ் 2016 ஆம் ஆண்டின் உலக சுற்றாடல் தினம் உலகமெங்கும் கொண்டாடப்படுகின்றது.



ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk